
TIMES OF INDIA
Dated: 23.09.2024

# Logistical challenges loom as govt pushes for 'one nation, one election'

Bharti.Jain@timesofindia.com

**New Delhi:** Apart from the challenge of getting the numbers to push through constitutional amendments for 'one nation one election', the govt also has to tackle several logistical issues, including regularisation of electoral rolls for panchayat polls.

While the electoral rolls for assembly and Lok Sabha polls are streamlined and a rigorous process is adopted in preparing them, the process for local body polls need to be streamlined, senior govt officials said, days after the Union cabinet accepted the recommendations of the committee led by former President **Ram Nath Kovind** on holding simultaneous elections.



From electoral rolls to electronic voting machines and movement of personnel, the logistical requirements are enormous, sources said.

As per the Election Commission's inputs sent to the Law Commission of India in March 2023 — which it had reiterated in its letter dated Jan 19, 2024, to the Kovind committee — the number of polling stations across the country would have to be increased to around 13.6 lakh in 2029, requiring the deployment of a total 53.8 lakh ballot units (BUs), 38.7 lakh control units (CUs) and 41.6 lakh voter-verifiable paper audit trail (VVPATs).

The EC stated that while 30.8 lakh BUs, 22.1 lakh CUs and 23.8 lakh would be available for synchronised polls in the 2029 general election cycle, 3.6 lakh BUs and 1.25 lakh CUs would have completed their life and would need to be phased out. Given the disruptions in the supply chain for semiconductors, the poll panel had highlighted this as a concern. The EC had also projected a major rise in manpower requirement in the event of simultaneous polls, saying that more polling personnel including the presiding officer will be needed at each polling station.

THE HINDU - TAMIL Dated: 23.09.2024

# ஒரே நாடு ஒரே தேர்தல் காலத்தின் கட்டாயம்

## மத்திய இணை அமைச்சர் கருத்து

● கொளப்பாக்கம்

குன்றத்தூர் அடுத்த கொளப்பாக்கத்தில் உள்ள தனியார் பள்ளியில் மாணவி ஒருவர் பிரதமர் மோடியின் பிறந்த நாளை முன்னிட்டு 800 கிலோ சிறு தானியங்களை கொண்டு பிரதமர் மோடியின் உருவப் படத்தை வரைந்து உலக சாதனை புரிந்தார். அந்த ஓவியத்தை மத்திய இணை அமைச்சர் எல்.முருகன் நேற்று நேரில் பார்த்து ரசித்தார்.

பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

ஒரே நாடு ஒரே தேர்தல் இந்த நாட்டுக்கு காலத்தின் கட்டாயம். இதற்காகசிறப்பு கமிட்டி அமைக்கப்பட்டு, கருத்து கேட்டு, அதன் அடிப்படையில் அறிக்கையை தந்துள்ளார்கள். மறைந்த முதல்வர் கருணாநிதியின் நெஞ்சுக்கு நீதி புத்தகத்தில் ஒரே நாடு ஒரே தேர்தல் அவசியத்தை உணர்த்தி இருக்கிறார். தமிழர் ஒருவர் நாட்டை ஆளவேண்டும்என்பது வரவேற்கக் கூடியது. இந்த பெரிய நாட்டை யார் வேண்டுமானாலும் ஆளலாம். பல்வேறு சூழ்நிலைகள் காரணமாக மீனவர்கள் எல்லைதாண்டிப் போகிறார்கள். பிரதமர் மோடி வந்த பிறகு துப்பாக்கிச் சூடு சம்பவம் ஏதும் இல்லை.

தமிழக வெற்றிக் கழகம் தலைவர் விஜய் விநாயகர் சதுர்த்திக்கு வாழ்த்து சொல்லவில்லை; ஈவேராவுக்கு மாலை செலுத்துகிறார். அனைத்துத் தரப்பு மக்களையும் அரவணைத்து சொல்லக் கூடியவர் தான் ஓர் அரசியல் கட்சியை நிர்வகிக்க முடியும். இவர் அனைத்துத் தரப்பு மக்களையும் சமமாகப் பாவிப்பாரா என்பது கேள்விக்குறி என்றார்.

# உள்ளாட்சி தேர்தலுக்கு தயாராகும் ஆணையம்

## இந்திய தேர்தல் ஆணையத்துக்கு பதில் கடிதம்

● சென்னை

உள்ளாட்சி தேர்தலை விரைவில் நடத்தும் வகையில், தற்போதுள்ள வாக்காளர் பட்டியலை பெற, இந்திய தேர்தல் ஆணையத்தின் கேள்விகளுக்கு பதிலளித்து மாநில தேர்தல் ஆணையம் கடிதம் அனுப்பியுள்ளது.

தமிழகத்தில் உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல் 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படுகிறது. அந்த வகையில், கடந்த 2019-ம் ஆண்டு டிசம்பர் மாதம் பிரிக்கப்பட்ட, புதிதாக உருவாக்கப்பட்ட 9 மாவட்டங்களை தவிர்த்து, மாற்ற மாவட்டங்களில் உள்ள ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு தேர்தல் நடைபெற்றது. இந்த ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் உறுப்பினர்களுக்கான பதவிக்காலம், இந்தாண்டு டிசம்பர் மாதத்துடன் முடிவடைகிறது.

இவை தவிர, கடந்த 2021-ம் ஆண்டு சட்டப்பேரவை தேர்தலுக்குப் பிறகு புதிதாக பொறுப்பேற்ற திமுக அரசு, தேர்தல் நடத்தப்படாத நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் 9 மாவட்டங்களுக்கான ஊரக உள்ளாட்சிகளுக்கு 2 கட்டமாக தேர்தலை நடத்தியது. திமுக ஆட்சியில் நடத்தப்பட்ட தேர்தலில் தேர்வான உறுப்பினர்கள் பதவிக்காலம் வரும் 2026-ம் ஆண்டு முடிவடைகிறது.

வரும் 2026-ம் ஆண்டு தமிழக சட்டப்பேரவைக்கான பொதுத்தேர்தலும் வருவதால், உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தலை ஒரே காலகட்டத்தில் நடத்தி முடிக்க ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

இதையொட்டி மாநில தேர்தல் ஆணையம் உள்ளாட்சி தேர்தலை நடத்துவதற்கான ஆயத்தப் பணிகளை தொடங்கியுள்ளது. இதையொட்டி, வாக்குப் பெட்டிகளை சரிபார்க்கும் பணிகளுக்காக, சமீபத்தில் நிதி ஒதுக்கி, அதற்கான அறிவுறுத்தல்களை வழங்கியது. முன்னதாக, தலைமை தேர்தல் அதிகாரியிடம் வாக்காளர் பட்டியலை, மாநில தேர்தல் ஆணையம் கோரியது.

குறிப்பாக, கடந்த மார்ச் மாதம் மக்களவைத் தேர்தல் நடைபெற்ற போது, மார்ச் 27-ம் தேதி சட்டப்பேரவை தொகுதி வாரியாக வெளியிடப்பட்ட புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியலை கேட்டது. அந்த வாக்காளர் பட்டியலின் அச்சிடப்பட்ட பிரதிகள் மற்றும் மென் பிரதிகளை வழங்கும்படி, மாவட்ட தேர்தல் அதிகாரிகளாக உள்ள மாவட்ட ஆட்சியர்களுக்கு அறிவுறுத்த வேண்டும் என்று, மாநில தேர்தல் அதிகாரிக்கு மாநில தேர்தல் ஆணைய செயலர் கே.பாலசுப்பிரமணியன் கடிதம் அனுப்பியிருந்தார்.

இதுதவிர, வாக்காளர் பட்டியல் தரவுகள் உள்ளாட்சித் தேர்தலுக்கு மட்டுமே பயன்படுத்தப்படும் என்றும், உரிய கள ஆய்வு மூலம் சரிபார்த்து, தனது சொந்த தரவுகளை ஆணையம் உருவாக்கும் எனவும் இந்த தரவுகளை யாருக்கும் பகிரமாட்டோம் தகுந்த நேரத்தில் உள்ளாட்சித் தேர்தல் தொடர்பான அறிவிப்பு வெளியிடப்படும் என்றும் தெரிவித்திருந்தார்.

தற்போதைய சூழலில், இந்திய தேர்தல் ஆணையத்துக்கே, மாநிலங்களின் வாக்காளர் பட்டியலை வெளியிடுவதற்கான அனுமதி இருப்பதால், இக்கடிதத்தை, தலைமை தேர்தல் அதிகாரி சத்திய பிரத சாஹூ, இந்திய தேர்தல் ஆணையத்துக்கு அனுப்பினார்.

தேர்தல் ஆணையம், சில கேள்விகளை எழுப்பி, மாநில தேர்தல் ஆணையத்துக்கு அனுப்பியது. இந்திய தேர்தல் ஆணையத்தின் கேள்வி கடிதத்துக்கு, மாநில தேர்தல் ஆணையம் பதிலளித்த நிலையில், அதனை தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரத சாஹூ, மீண்டும் தேர்தல் ஆணையத்துக்கு அனுப்பி உள்ளார். இதையடுத்து, விரைவில் இந்திய தேர்தல் ஆணையம் வாக்காளர் பட்டியலை மாநில தேர்தல் ஆணையத்துக்கு அளிக்க ஒப்புதல் அளிக்கும் என தேர்தல் அதிகாரிகள் தெரிவித்தனர்.

DAILY THANTHI
Dated: 23.09.2024

# 'ஒரே நாடு, ஒரே தேர்தல்' முறையை ஆய்வு செய்து முடிவு எடுப்போம்

## நவீன் பட்நாயக் பேட்டி

புவனேஸ்வரம், செப்.23-
'ஒரே நாடு, ஒரே தேர்தல்' முறையை ஆய்வு செய்த பிறகு எங்கள் நிலைப்பாட்டை முடிவு செய்வோம் என்று நவீன் பட்நாயக் கூறினார்.

### விரிவாக ஆய்வு

நாடாளுமன்றம், சட்டசபைகளுக்கு ஒரே நேரத்தில் தேர்தல் நடத்துவதற்கான, 'ஒரே நாடு, ஒரே தேர்தல்' முறைக்கு மத்திய மந்திரிசபை ஒப்புதல் அளித்துள்ளது. அது பற்றி பல்வேறு கட்சிகளும் தங்கள் நிலைப்பாட்டை தெரிவித்துள்ளன. ஆனால், பிஜு ஜனதாதளம் கட்சி இன்னும் தனது முடிவை தெரிவிக்கவில்லை. இந்நிலையில், புவனேஸ்வரத்தில் நடந்த ஒடிசா இலக்கிய திருவிழாவில், பிஜு ஜனதாதள தலைவரும், முன்னாள் முதல்-மந்திரியுமான நவீன் பட்நாயக் கலந்துகொண்டார். அங்கு அவர் அளித்த பேட்டியில் கூறியதாவது:-

ஒரே நாடு, ஒரே தேர்தல் முறையையும், அது அமல்படுத்தப்படும் விதத்தையும் விரிவாக ஆய்வு செய்வோம். அதன் பிறகு எங்கள் நிலைப்பாட்டை முடிவு செய்வோம்.

### 100 நாள் ஆட்சி

ஒடிசாவில் பா.ஜனதா ஆட்சியில் சட்டம்-ஒழுங்கு சீர்கெட்டு வருகிறது. புரியில், ஒரு அதிகாரியை கவர்னரின் மகன் தாக்கி உள்ளார். ஒரு ராணுவ மேஜரும், அவருடைய வருங்கால மனைவியும் போலீஸ் நிலையத்தில் துன்புறுத்தப்பட்டுள்ளனர். இவையெல்லாம் நல்ல சாதனைகள் அல்ல. மத்திய, மாநில அரசுகளின் 100 நாட்கள் செயல்பாடு பற்றி இப்போதே மதிப்பிட முடியாது. கடந்த 24 ஆண்டுகளாக ஒடிசா மக்களுக்கு சேவை செய்தேன். தற்போது, எதிர்க்கட்சி தலைவராக எனது சேவை தொடர்கிறது.

இவ்வாறு அவர் கூறினார்.